DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 7/2025 |
| Deposition of witness | : | P W- 6 |
| Name | : | தேன்மொழி |
| Father's /Husband Name | : | தங்கமுத்து |
| Village | : | பெரம்பலூர் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 34 |
| Occupation | : | உதவி மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day March, 2026.
Accused absent. 355 petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். இதற்கு முன்னர் நன்னிலம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். கடந்த 19.7.2024-ம் தேதி காலை 10.30 மணிக்கு நான் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது நன்னிலம் மாப்பிள்ளைக்குப்பத்தை சேர்ந்த ரவி மனைவி தனம் வயது 60 என்பவரை அன்று காலை 9.00 மணிக்கு தெரிந்த 2 நபர்கள் அன்றைக்கு யார் மண் வெட்டியால் வெட்டியதாக அதனால் தலையில் காயத்துடன் என்னிடம் சிகிச்சைக்கு வந்தாகவும் அவர் அரை மயக்கத்தில் இருந்ததால் அவர் கணவர் கூறினார். அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தேன். அவரை பரிசோதித்த போது கீழ்கண்ட காயங்கள் காண்ப்பட்டன.

1. ஆழமான சிதைந்த காயம் 7x3x3 செ.மீ. அளவில் வலது முன்னந்தலையில் இருந்து பின்னதலை வரை நீண்டு காணப்பட்டது. அந்த காயத்தில் அதிக வேகமாக தாக்கப்பட்டு ஆழமான காயம் ஏற்பட்டதால் அதில் ரத்த நாளங்கள் துண்டாகி இருந்ததால் அதிலிருந்து ரத்தம் பீறிட்டு இருந்தது.

மேற்படி நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவரை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லுரி மருத்துமனைக்கு மேல் சிசிச்சைக்காக பரிந்துரை செய்தேன். மேற்படி நபருக்கு நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.5** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறியதுபோல் மண்வெட்டியால் தாக்கப்பட்டிருந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

2. மேற்படி அதே நாளான 19.7.2024ம் தேதி காலை 11.15 மணிக்கு மேற்படி தனம் என்பவரின் கணவரான ரவியும் என்னிடம் அவரது நண்பர் ஆசைமணி என்பவரால் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவர்களின் 3 தெரிந்த நபர்கள் அன்றைய தின்ம் காலை 9 மணிக்கு அவர்கள் வீட்டு அருகே வைத்து மரக்கட்டையால் தாக்கியதாக கூறினார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ் காணும் காயங்கள் காணப்பட்டது.

1. அவரது இடது முட்டியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
2. இடது முன்னந்தலை பகுதியில் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

அவருக்கு வெளிநோயாளியாக முதலுதவி சிகிச்சை அளித்து சிகிச்சையில் இருந்து விடுவித்தேன். மேற்படி நபருக்கு நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறியதுபோல் மரக்கட்டையால் தாக்கப்பட்டிருந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று கீழே விழுந்தாலும் மேற்படி நபர்களுக் ஏற்பட்டு இருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. காயம்பட்ட மேற்படி தனம் என்பவர் வேகமாக சென்று நிலைதடுமாறி கல்லில் விழுந்தாலோ அல்லது மரத்தில் மோதினாலோ அவருக்கு இருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. ரவி என்பவருக்கு காணப்பட்ட காயங்கள் வாகனத்திலிருந்து கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். தனம் என்பவர் அவரது வீட்டில் இருந்த வேகமாக வெளியே வரும்போது வாசலில் இடித்து கொண்டால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.